1987 மே 4]

### (ஊ) துவரங்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டுவதில் தடங்கல்.

திரு. க. சோலைராசு: தலைவர் அவர்களே, "துவரங்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டும் திட்டத்தினை அற நிலையத் துறையினர் தடுத்து நிறுத்திவிட்டனர் என்ற அப்பகுதி மக்கள் அச்சம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வீ. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மருங்காபுரி அருள்மிகு கரிகிரிவரதராசப் பெருமாள் திருக்கோவிலுக்குச் சொந்தமான துவரங்குறிச்சி கிராமத்திலுள்ள ச. எண் 23/3-பி-ல் உள்ள 4.36 ஏக்கர் நிலத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க பொதுப் பணித்துறையினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கட்டிடம் கட்டப்பட்ட பொழுது மேற்படி திருக்கோவிலின் பரம்பரை அறங்காவலர் மற்றும் செயல் அலுவலரால் மேற்கொண்டு கட்டிடம் கட்ட முடியாதபடி மணப்பாறை மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் ஓ. எஸ். 858/80 வழக்கு தொடர்ந்து இடைக்கால தடை உத்தரவும் பெறப்பட்டுள்ளது.

திருக்கோவிலின் நிலத்தில் பிரவேசிப்பதாயின் 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் பிரிவு 34-ன்படி இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆணையரின் முன் அனுமதி பெறப்பட்டு அதன்படி நிலக்கிரயமோ அல்லது வாடகையோ குத்தகையோ கொடுக்க அனுமதி பெற்ற பின்னரே பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாமல் பிரவேசித்தால், சட்டப்படி செல்லாது என்பதாலும் திருக்கோவிலின் நன்மையைக் கருதியும் செயல் அலுவலரும், பரம்பரை அறங்காவலரும் இதனைத் தடுத்துள்ளனர். ஆணையரின் அனுமதி பெற்று நிலத்தைக் கிரயம் பெற்றோ அல்லது ஆர்ஜிதம் செய்தோ ஆரம்பச் சுகாதார நிலையம் கட்ட நடவடிக்கை மேற்கொண்டிருந்தால்

பாரம்பரை அறங்காவலர் மற்றும் செயல் அலுவலர் அவ்வாறு செய்திருக்க மாட்டார்கள். கோவில் சொத்தை பாதுகாக்க செயல் அலுவலர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது முறையான செயலாகும். நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு திருக்கோயிலுக்குச் சாதகமாக தீர்ப்பானபோதிலும் பொதுமக்களின் நன்மையைக் கருதியும், கரூர் மாவட்ட உடல் நல அலுவலர் தற்போது மேற்படி நிலத்திற்குண்டான கிரயத்தை வருவாய்த்துறை நிர்ணயிக்கும் விலையைக் கொடுத்து விடுவதாக ஒப்பந்தம் செய்து கொள்வதாகவும், நீதிமன்றத் தடை உத்தரவை நீக்கிக்கொண்டால் கிரயத் தொகையைச் செலுத்த நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளதாலும், தற்போது நிலத்தைச் சுகாதாரத் துறைக்கு விற்பனை செய்ய இந்து சமய அறநிலையச் சட்டப் பிரிவு 34-ன் கீழ் உரிய படிவத்தில் மனுவைப் பெற்று அனுப்ப திருச்சிராப்பள்ளி இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையரைக் கேட்கப்பட்டுள்ளது. துணை ஆணையரின் அறிக்கையைப் பெற்று நில விற்பனை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். நிலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்களையும் நீதிமன்றத் தீர்ப்பு இருந்தும் எதும் செய்யவில்லை. நிலத்தைக் கிரயம் பெற்ற பின்னர் சுகாதார நிலையம் கட்ட தடை எதும் இல்லை என்ற விபரமும் தெரிவிக்கப்படுகிறது.

திரு. க. சோலைராசு: தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் துணை ஆணையரின் அறிக்கையைப் பெற்று நில விற்பனை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 1982 ஆம் ஆண்டில் மருத்துவத் துறையினர் அரசு நிர்ணயிக்கிற விலையைத் தரத் தயார் என்றும், அறநிலையத் துறையினர் அரசு நிர்ணயிக்கிற விலையைப் பெற்றுக்கொண்டு அந்த இடத்தை மருத்துவத் துறைக்குத் தருவதற்குத் தயார் என்றும் எழுதி ஒப்பந்தத்தைப் போட்டிருக்கிறார்கள். ஆனால் 1982 ஆம் ஆண்டு போடப்பட்ட அந்த ஒப்பந்தம் குறித்து அறநிலையத் துறையில் விரைவான நடவடிக்கை இல்லாததால் அந்தப் பகுதியில் மருத்துவமனை வருவது தடைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 20 மைல் சுற்றளவில் 40,000 மக்கள் மருத்துவமனை இல்லாமல் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். எனவே, சட்டச் சடங்குகளுக்குக் காத்திராமல் மனிதாபிமான

1987 மே 4] [திரு. க. சோலைராசு]

அடிப்படையில், மக்களுக்கு மருத்துவ வசதி செய்து தரவேண்டு மென்ற உணர்வோடு அறநிலையத் துறை விரைவான நடவடிக் கையெடுத்து, அந்தப் பகுதி மக்களுக்கு மருத்துவ வசதி செய்து தருவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அறநிலையத் துறை ஏற்கெனவே ஒப்புதல் கொடுத்திருந்தால் நிச்சயமாக வேலை துவக்கப்படலாம். விவர அறிக்கையின்படி அறநிலையத் துறையைக் கலக்காமல் அறநிலையத் துறைக்குச் சொந்தமான மருங்காபுரி அருள்மிகு கரிகிரி வரதராசப் பெருமாள் திருக்கோவிலுக்குச் சொந்தமான சு. எண் 23/3-பி-ல் உள்ள 4.36 ஏக்கர் நிலத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க பொதுப்பணித் துறையினர் கட்டடம் கட்டியதால்தான் அதில் சம்பந்தப்பட்ட கோவில் தக்காரும், செயல் அலுவலரும் கோர்ட் டில் தடை வாங்கியிருக்கிறார்கள். கோவிலுக்குச் சாதகமாக கோர்ட் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இந்து சமய அறநிலையங் கள் சட்டப்படி செக்ஷன் 34-ன்படி அனுமதி கோரி விண்ணப் பிக்க வேண்டும். அப்படி விண்ணப்பம் கோரிய கருத்துருவை சம்பந்தப்பட்ட செயல் அலுவலரிடமிருந்து பெறுவதற்கு துணை ஆணையருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே தீர்ப்பு சாதகமாக வந்திருக்கிறது என்று சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரையில், நீதி மன்றத்திலேயிருந்து அறநிலையத் துறைக்குச் சாதகமாக தீர்ப்பு வருகிறதா, அல்லது மருத்துவத்துறைக்குச் சாதகமாக வருகிறதா என்பதைப் பற்றிக் கவலை கிடையாது. எங்களைப் பொறுத்த வரையில் மக்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வருகிறதா என்பதைத் தான் பார்க்கிறோம். 1982 ஆம் ஆண்டு மருத்துவத் துறையி னுடைய துணை இயக்குநர் அவர்களும் இந்தத் துணை ஆணையர் அவர்களும் நிலத்தை எடுத்துக் கொள்வதற்கும், நிலத்தைக் கொடுப்பதற்கும் சம்மதிக்கின்றோம் என்று எழுதிக் கொடுத்திருக் கிறார்கள். அதனுடைய அடிப்படையில் மருத்துவத் துறை

யினர் கட்டிடத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறபோது—அதற்குரிய மதிப்பு வந்துவிட்டால் பணத்தைக் கொடுத்து விடலாம் என்ற ஒரு எண்ணத்திலே அவர்கள் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கினார்கள்—அறநிலையத் துறையினுடைய தாமதமான நடவடிக்கையினால், எங்களுக்கு இந்த விலையை நிர்ணயித்த பிறகுதான் நீங்கள் கட்டிடத்தைக் கட்டவேண்டும் என்று சொல்லி, நிறுத்தி இருக்கிறார்கள். ஆகவே நிர்ணயித்த அந்த விலையைத் தருவதற்கு மருத்துவத் துறை தயாராக இருக்கிறது. எனவே, விரைவிலேயே அறநிலையத்துறை நடவடிக்கை எடுத்து, மருத்துவத் துறையிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு, இந்தத் திட்டத்திற்கு விலக்கு அளித்து, மக்களுக்கு மருத்துவ வசதியைச் செய்து தருவதற்கு அமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு வேண்டுமானால் அறநிலையத் துறையைப் பற்றிக் கவலை இல்லாமல் இருக்கலாம். ஆனால் அரசு அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதாக இருக்கிறது. கோவிலுக்குச் சொந்தமான இடத்தைச் சட்டப்படி எடுக்காமல், இரண்டு துறையினரும் ஒப்புதல் செய்து கொண்டாலும் கூட, இந்து சமய அறநிலையத் துறை சட்டம் 34 பிரகாரம், குறிப்பிட்ட படிவத்தில் விண்ணப்பம் எழுதி இசைவைப் பெற்றுதான் செய்ய வேண்டும். இந்த இசைவைப் பெறும்படியாக கேட்டிருக்கிறோம். அறநிலையத் துறையால் எந்தத் தாமதமும் இல்லை.

(எ) நத்தம் கோயில்பட்டி கைலாசநாதர் கோயில் திருப்பணி.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நத்தம் கோவில்பட்டியிலிருக்கும் பாண்டிய மன்னர் காலத்தில் கட்டப்பட்ட, பிரசித்தி பெற்ற அருள்மிகு கைலாசநாதர் கோவில் தற்சமயம் மிகவும் பழுதடைந்த நிலையில்